நகர்மன்றம்
உதகமண்டலம்
29.09.2023

அன்புடையீர்

வணக்கம், இந்நகர்மன்ற செப்டம்பர் 2023ம் மாத சாதாரணக் கூட்டம் வருகின்ற 29.09.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் நகரமன்ற தலைவர் திருமதி.எம்.வாணீஸ்வரி அவர்களின் தலைமையில் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப்பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**<u>முன்னிலை : திருமதி.எம்.வாணீஸ்வரி, நகர மன்ற தலைவர்</u>**

1. மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.டி.10/518/2023 நாள். 31.08.2023 மற்றும் தலைவர் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி, உதகை அவர்களின் 31.08.2023 ம் தேதிய கடிதங்களின் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி நகராட்சி பங்கு தொகையான ஆண்டொன்றுக்கு ரூ.2500/- வீதம் 2022-2023 மற்றும் 2023-2024 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.5000/- செலுத்தமானறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 2022-2023 மற்றும் 2023-2024 ம் ஆண்டுகளுக்கான நகராட்சி பங்கு தொகை ரூ.5000/-ஐ இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதி வழங்கலாம்.**

2. இந்நகராட்சிக்கு சொந்தமான கார்டன் சாலை பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஐந்து கடைகளுக்கு வழிகாட்டி மதிப்பு, சந்தை நிலவரம் மற்றும் பொதுப் பணித்துறையின் Schedule of Rate ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மாத வாடகை தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | சந்தை நிலவரப்பட் கடை ஒன்றுக்கு மாத வாடகை | ரூ.3,000/-+GST |
| 2 | சொத்து வழிகாட்டி மதிப்பின்படி கடை ஒன்றுக்கு மாத வாடகை | ரூ.1,600/-+GST |
| 3 | பொது பணித்துறையின் Schedule of Rate – ன் படி கடை ஒன்றுக்கு மாத வாடகை | ரூ.1,262/-+GST |

மேற்கண்டவாறு கடை ஒன்றுக்கு மாத வாடகை தொகை கணக்கிடப்பட்டதில் சந்தை நிலவரப்படி கணக்கிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை அதிகமாக உள்ளதால், அதனை குறைந்தபட்ச அரசு நிர்ணய மாத வாடகை தொகையாக நிர்ணயம் செய்து பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், வைப்பு தொகை ரூ.75,000/- மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.75,000/- என நிர்ணயம் செய்து பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

**சந்தை நிலவரப்படி மாத ஒன்றுக்கு ரூ.3,000/- குறைந்த பட்ச மாத வாடகை தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றம் அனுமதிக்கலாம். மேலும் வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை தலா ரூ.75,000/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றம் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.323/2023/அ1)**

3. இந்நகராட்சிக்கு சொந்தமான கார்டன் சாலை மற்றும் ஆட்லி சாலை பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கடைகளுக்கு வாடகை தொகை நிர்ணயம் செய்யப்பட்டதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அறிவுறுத்தியும் மற்றும் ஏல வைப்புத் தொகையை குறைக்கவும் அறிவுறுத்தி கடந்த 26.04.2023 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகளை நிராகரித்து மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோர அறிவுறுத்தியும் இந்நகரமன்ற தீர்மானம் எண்.1180 நாள்.27.04.2023ல் தீர்மானம் நிலைவேற்றப்பட்டதை தொடர்ந்து கார்டன் சாலை மற்றும் ஆட்லி சாலை பகுதியில் உள்ள கடைகளுக்கு வழிகாட்டி மதிப்பு, சந்தை நிலவரம் மற்றும் பொதுப் பணித்துறையின் Schedule of Rate ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மாத வாடகை தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | சந்தை நிலவரப்பட் கடை ஒன்றுக்கு மாத வாடகை | ரூ.3,000/- + GST |
| 2 | சொத்து வழிகாட்டி மதிப்பின் கடை ஒன்றுக்கு மாத வாடகை | ரூ.1,600/- + GST |
| 3 | பொது பணித்துறையின் Schedule of Rate – ன் படி கடை ஒன்றுக்கு மாத வாடகை | ரூ.1,262/- + GST |

மேற்கண்டவாறு கடை ஒன்றுக்கு மாத வாடகை தொகை கணக்கிடப்பட்டதில் சந்தை நிலவரப்படி கணக்கிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை அதிகமாக உள்ளதால், அதனை குறைந்தபட்ச அரசு நிர்ணய மாத வாடகை தொகையாக நிர்ணயம் செய்து பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், வைப்பு தொகை ரூ.1,00,000/- மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.1,00,000/- என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை முறையே வைப்புத் தொகை ரூ.75,000/- மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.75,000/- என குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**சந்தை நிலவரப்படி மாத ஒன்றுக்கு ரூ.3,000/- குறைந்த பட்ச மாத வாடகை தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றம் அனுமதிக்கலாம். மேலும் வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை தலா ரூ.75,000/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றம் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.323/2023/அ1)**

4. உதகமண்டலம் நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் மடிக்கணிணியில் (Laptop) பழுதாக உள்ளதால் இதனை இயக்குவது மிகவும் சிரம்மாக உள்ளதால் மேற்படி மடிக்கணிணியில் சரிசெய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.15,000/- நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி மேற்கொளள அனுமதி வழங்கலாம்.**

5. இந்நகராட்சியில் அலுவலக நடைமுறைகள் கணிணி வழியாகவும். இணையதளம் மூலமாகவும் பொதுமக்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இணையதளம் மூலம் கணிணிகள் பாதிக்கப்படுகின்றது. இதனால் அவ்வபோது பணிகள் மேற்கொள்ள மிகவும் சரியாக உள்ளது. எனவே கணிணிகளுக்கு தேவையான Antivirus மென்பொருள்ள 50 எண்கள் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.37000/-க்கு நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.**

6. உதகமண்டலம் நகரராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு அவ்வப்போது நகராட்சி நிர்வாக இயக்குநகரம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் மூலம் ஆய்வு கூட்டம் நடைபெறுவதாலும், கூட்டத்தில் கலந்து கொள்ள

மடிக்கணினி (Laptop) தேவைப்படுவதால் புதிதாக இரண்டு மடிக்கணினிகள் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.2,80,000/- நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதி வழங்கலாம்.**

7. கோவிட்-19ன் பெருந்தொற்றின்காரணமாக பொது முடக்கம் செய்யப்பட்டதை அடுத்து பொது முடக்க காலங்களான 01/06/2020 முதல் 31/08/2020 வரை (முதலாம் அலை) மற்றும் 01/05/2021 முதல் 30/06/2021 வரை (இரண்டாம்அலை)த்திற்கு உள்ளாட்சி அமைப்புக்களுக்கான குத்தகை தொகை மற்றும் வாடகை தொகைகளை தள்ளுபடி செய்ய அரசாணை நிலை எண்.337, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 16/06/2023ல் அறிவுறுத்தப்பட்டுள்ளதை, மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுகிறது.

எனவே இந்நகராட்சிக்கு சொந்தமா னகுத்தகை இனங்களுக்கான கேட்பினை அரசு அறிவித்துள்ள நெறிமுறைகளுக்குட்பட்டு தள்ளுபடி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** -

1. **மேற்படி அரசாணையை மன்றம் பதிவு செய்யலாம்.**
2. **அரசு அறிவித்துள்ள காலத்திற்கான கேட்பினை அரசின் நெறிமுறைகளுக்குட்பட்டு தள்ளுபடி செய்வதை மன்றம் அனுமதிக்கலாம்.**

8. இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற மனுக்கள் குழு 16-06-2022 முதல் 18-06-2022 வரை ஆய்வு மேற்கொள்ள வருகை புரிந்தார்கள். செலவினம் தொகை ரூ. 16100/- ஐ தமிழகம் விருந்தினர் மாளிகைக்கு வழங்க நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ2/6229/2023)**

9. இந்நகராட்சியில் இயங்கி வரும் பொறியல் பிரிவு TN 43 C 1837 Sullage Sucker வாகனத்தின் தகுதி சான்றிதழ் முடிவடைந்து உள்ளதாலும், வாகனத்தில் உள்ள பகுதிகளை சரி செய்ய வேண்டி உள்ளதாலும், இதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ. 84,400 /-க்கு நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ2/6230/2023)**

**10.** அரசாணை 4 (D) எண். 35 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் . 18-08-2023 ன்படி. கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT), 2023-2024 திட்டத்தில் நகராட்சிக்கு செந்தமான தினசரி சந்தை கடைகளை மேம்படுத்தும் பணிக்கு ( phase – II ) ரூ.18.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 50 % தொகை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT), 2023-2024 நிதி மற்றும் 50 % தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி தினசரி சந்தை கடைகளை மேம்படுத்தும் பணிக்கு( phase – II) நகராட்சி பங்களிப்பு தொகையான ரூ.9.00 கோடியினை நகராட்சி நிதியில் இருந்து ஈடு செய்யும் நிலையில் நகராட்சி நிதி நிலைமை இல்லாத காரணத்தினால், நகராட்சியின் பங்கு தொகையான ரூ.9.00 கோடியினை ஏதேனும் ஒரு அரசு திட்ட நிதியிலிருந்து, முழுமானியமாக வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை கேட்டுக்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ1 /6035 /2023)**

11. இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தை உட்பறம் மற்றும் வெளிப்புறம் உள்ள கடைகளில் நகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்ட கடைகள் மற்றும் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட கடைகளுக்கு கடந்த 30/08/2023 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி எம்.எஸ்.லைன் உள்ள கடை எண்.6க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | அமைவிடம் | கடை எண். | கடையின்வ.வி. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலம் கோரப்பட்ட தொகை | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | எம்/எஸ் லைன் | 6 | 068/BD 01/ 00007 | திரு.என். ஜெயராமன் த/பெநாராயணன், சியர்வியுகாட்டேஜ், அரசுமருத்துவமனைசாலை, உதகை. | ரூ.27,000/- | **திரு.என். முருகன், த/பெ நடராஜன், அப்பர் பஜார், உதகை ரூ.27,500/-** |
| | | | | திரு.என். முருகன், த/பெநடராஜன், அப்பர்பஜார், உதகை. | ரூ.27,500/- | |

மேற்படி கடைக்கு அரசாங்க மதிப்பாக ரூ.50,100/- மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு 21/08/2020, 02/09/2020, 11/09/2020, 30/09/2020, 09/10/2020, 16/10/2020, 23/10/2020, 05/11/2020, 17/11/2020, 16/02/2021, 23/02/2021, 11/05/2021, 21/05/2021, 20/07/2021, 27/07/2021, 10/08/2021, 27/08/2021, 22/09/2021, 05/01/2022, 20/01/2022 25/01/2022, 08/03/2022, 15/03/2022, 29/03/2022, 12/04/2022, 28/04/2022, 06/05/2022, 18/05/2022, 07/06/2022, 30/06/2022, 22/07/2022, வரை 31 முறை ஏலம் கோரப்பட்டதில் ஒருவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகோர முராத

காரணத்தினால் கடந்த 11/08/2022 மற்றும் 07/09/2022 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட அரசாங்க மதிப்பான ரூ.50,100/-ஐ குறைந்து ரூ.45,000/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டும் ஒருவரும் ஏலம் கோர முன்வராத காரணத்தினால், 28/09/2022 மற்றும் 17/11/2022 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட பொது ஏலத்திற்கு அரசாங்க மதிப்பாக ரூ.40,000/- குறைக்கப்பட்டது அதிலும் ஒருவரும் ஏலம் கோராத காரணத்தினால் 09/12/2022 மற்றும் 06/01/2023 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட பொது ஏலத்திற்கு அரசாங்க மதிப்பாக 35,000/-ம், 04/05/2023 மற்றும் 20/06/2023ம் தேதிகளில் நடத்தப்பட்ட ஏலத்திற்கு குறைந்தபட்ச ஏலத் தொகையாக ரூ.30,000/-நிர்ணயம் செய்யப்பட்ட போதிலும் ஏலம்/

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படாத காரணத்தினாலும், கடந்த 27/07/2023ம் தேதி நடத்தப்பட்ட பொது ஏலம்/ ஒப்பந்தப்பந்தபுள்ளிகளுக்கான அரசாங்க மதிப்பாக ரூ.25,000/ நிர்ணயம் செய்யப்பட்ட நிலையில் 30/08/2023 அன்று ஏலம் கோர யாரும் முன்வராத நிலையில், இரண்டு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர். இவ்விரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.என். முருகன் த/பெ நடராஜன், அப்பர் பஜார், உதகை அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக ரூ.27,500/- கோரியுள்ளார். இத்தொகையானது எம்.எஸ்.லைன் பகுதியில் உள்ள கடை எண். 5 மற்றும் 7க்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை தொகையாக ரூ.26,884/-ஐ காட்டிலும் கூடுதலான தொகையாகும் எனவே திரு.என். முருகன் த/பெநடராஜன் அவர்களின் உயர்ந்தபட்ச ஏலத் தொகைன ரூ.27,500/-ஐ ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுலககுறிப்பு**

**பல முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் ஒருவரும் ஏலம் கோர முன்வராத நிலையில் திரு.என். முருகன் த/பெ நடராஜன், அவர்களின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.27,500/-ஐ மன்றம் ஏற்கலாம்.**

12. இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தை உட்பறம் மற்றும் வெளிப்புறம் உள்ள கடைகளில் நகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்ட கடைகள் மற்றும் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட கடைகளுக்கு கடந்த 30/08/2023 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பீட்டன்ஸ் சாலை உள்ள கடை எண்.7க்கு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | அமைவிடம் | கடை எண். | கடையின் வ.வி.எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலம் கோரப்பட்ட தொகை | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | பீட்டன்ஸ் சாலை | 7 | ---- | திரு.முருகன் 1/210 கரியம்பாளையம், அன்னூர் (அஞ்சல்) எல்லப்பாளையம், கோயம்புத்தூர் | ரூ.20,000/- | **திரு.விமல் வி.நெட்டெக் னாலஜிஸ், லவ்டேல், உதகை ரூ.22,500/-** |
| | | | | திரு.தனசேகர், பீட்டன்ஸ்சாலை, உதகமண்டலம் | ரூ.22,000/- | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | திரு.விமல்<br>வி.நெட்டெக்னாலஜிஸ்,<br>லவ்டேல், உதகை | ரூ. 22,500/- | |

மேற்படி கடைக்கு அரசாங்க மதிப்பாக ரூ.39,500/- மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு 21/08/2020, 02/09/2020, 11/09/2020, 30/09/2020, 09/10/2020, 16/10/2020, 23/10/2020, 05/11/2020, 17/11/2020, 16/02/2021, 23/02/2021, 11/05/2021, 21/05/2021, 20/07/2021, 27/07/2021, 10/08/2021, 27/08/2021, 22/09/2021, 05/01/2022, 20/01/2022 25/01/2022, 08/03/2022, 15/03/2022, 29/03/2022, 12/04/2022, 28/04/2022, 06/05/2022, 18/05/2022, 07/06/2022, 30/06/2022, 22/07/2022, வரை 31 முறை ஏலம் கோரப்பட்டதில் ஒருவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன்வராத காரணத்தினால் கடந்த 11/08/2022 மற்றும் 07/09/2022 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட அரசாங்க மதிப்பான ரூ.39,500/-ஐ குறைந்து ரூ.35,000/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டும் ஒருவரும் ஏலம் கோர முன்வராத காரணத்தினால், 28/09/2022 மற்றும் 17/11/2022 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட பொது ஏலத்திற்கு அரசாங்க மதிப்பாக ரூ.30,000/- குறைக்கப்பட்டது அதிலும் ஒருவரும் ஏலம் கோராத காரணத்தினால் 09/12/2022 மற்றும் 06/01/2023 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட பொது ஏலத்திற்கு அரசாங்க மதிப்பாக 27,500/-ம் 04/05/2023 மற்றும் 20/06/2023ம் தேதிகளில் நடத்தப்பட்ட ஏலத்திற்கு குறைந்தபட்ச ஏலத் தொகையாக ரூ.25,000/-நிர்ணயம் செய்யப்பட்ட போதிலும் ஒருவரும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோராப்படாத காரணத்தினாலும், கடந்த 27/07/2023 மற்றும் 30/08/2023ம் தேதிகளில் நடத்தப்பட்ட பொது ஏலம்/ ஒப்பந்தப்பந்தபுள்ளிகளுக்கான அரசாங்க மதிப்பாக ரூ.22,500/ நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில் 30/08/2023 அன்று ஏலம் கோர யரும் முன்வராத நிலையில் மேற்கண்ட மூன்று நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளனர். இம்மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.விமல், வி.நெட்டெக்னாலஜிஸ், லவ்டேல், உதகை அவர்கள் உயர்ந்த பட்ச ஏலத் தொகையாக ரூ.22,500/- கோரியுள்ளார் இத்தொகையானது பீட்டன்ஸ் ரோடு பகுதியில் உள்ள கடைஎண். 6க்கு 23,500/-ம் மற்றும் கடைஎண். 8க்கு மாத வாடகை தொகையாக ரூ.19,100/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாலும், இம்மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.விமல், வி.நெட்டெக்னாலஜிஸ், லவ்டேல், உதகை அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக ரூ.22,500/- கோரியுள்ளார். இதனை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அலுலககுறிப்பு

**பலமுறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் ஒருவரும் ஏலம் கோர முன்வராத நிலையில் திரு.விமல், வி.நெட்டெக்னாலஜிஸ், லவ்டேல், உதகை அவர்களின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.22,500/-ஐ மன்றம் ஏற்கலாம்.**

## <u>வாசிப்பு தீர்மானங்கள்</u>

| | | |
|---|---|---|
| 13 | நகரமன்ற உறுப்பினர் வார்டு எண்.24 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 பகுதியில் உள்ள மழைநீர் கால்வாய், பாதாள சாக்கடை, நடைப்பாதை மழைகாலங்களில் தெருவுக்குள் மழைநீர் புகுந்து சேதம் ஏற்படுத்துவதால் மாரியம்மன் கோயில் முதல் மடப்பள்ளி நாயக்கர் தெரு வரை மேலே குறிப்பிட்ட அனைத்தையும் சரி செய்து தருமாறு அனுமதி வேண்டப்படுகிறது. |
| 14 | நகரமன்ற உறுப்பினர் வார்டு எண்.24 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 24 பகுதியில் உள்ள முத்துக்கருப்பன் தெரு, மேல் தங்காளம் தெரு, தியாகி குமரன் தெரு ஆகிய பகுதிகளில் பாதாளச் சாக்கடை, நடைப்பாதை, மழைநீர் கால்வாய் ஆகியவை மிகவும் பழுதடைந்துள்ளதால் உடனடியாக அனைத்து பணிகளையும் சரிசெய்து தருமாறு அனுமதி வேண்டப்படுகிறது |
| 15 | நகரமன்ற உறுப்பினர் வார்டு எண்.34 | இந்நகராட்சிக்குட்பட்ட HMT முதல் குன்னூர் சாலையை இணைக்கும் சாலையில் திரு.பாரூக் அவர்களின் வீட்டின் அருகிலிருந்து சன்ரைஸ் காட்டேஜ் வரை உள்ள பிரதான சாலையில் அமைந்துள்ள தெரு விளக்கு கம்பங்களில் தெரு விளக்கு இணைப்பு இல்லாததால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே பொதுமக்களின் நலன் கருதி அப்பகுதியில் தெரு விளக்கு இணைப்பு சரி செய்யவும் அதற்கான மதிப்பீடு தயார் செய்ய நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| 16 | நகரமன்ற உறுப்பினர் வார்டு எண்.34 | இந்நகராட்சிக்குட்பட்ட 34 வார்டுக்கு உட்பட் நேரு நகரில் அமைந்துள்ள பேச்சியம்மாள் க/பெசங்கரன் எண் 95-பி வீடு தடுப்பு சுவர் இல்லாமல் மிகவும் பாதுகாப்பற்ற நிலையிவ் உள்ளது. மழைகாலங்களில் மண் இடித்து வீடு இடியும் நிலையில் உள்ளதால் அதனை சரி செய்ய நகரமன்றத்தின் அனுமதியும், மதிப்பீடு தயார் செய்ய நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

17. உதகமண்டலம் நகராட்சியின் தீட்டுக்கல் உரக்கிடங்கில் 60 Tonne Capacity Capacity எடை மேடை அமைக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 36 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகள் தீட்டுக்கல் உரக்கிடங்கிற்கு லாரிகள் மூலம் எடைமேடையில் ஈரகுப்பைகள் மற்றும் உலர் குப்பைகள் எடை மேடையில், எடை பார்த்து பின்னர் உரக்கிடங்கில் பிரிதிதெடுக்கப்படுகிறது. மேலும் Bio – Mining முறையில் பிரித்தெடுக்கப்படும் மன், பிளாஸ்டிக், பாட்டில். துணி ஆகிய பொருட்கள் லாரியில் தனித்தனியாக எடை பார்த்து வெளியே அனுப்பப்படுகிறது. மேலும் இவ்எடை மேடையில் எடுக்கப்படும் அறிக்கையினை அண்ணா பல்கலை கழகம், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட எடைமேடை, கணிணி ஆகியவை அடிக்கடி சிறுசிறு பழுதுகள் ஏற்படுவதால் எடைமேடையில் அளவுகள் எடுக்க சிரமமாக உள்ளது. எனவே தீட்டுக்கல் உரக்கிடங்கில் உள்ள எடைமேடை Monitor, UPS மற்றும் CPU ஆகியவற்றினை வருடாந்திர, பராமரிப்பு பணி மேற்கொள்வது அவசியமானதாகும். இப்பணியினை மேற்கொள்ள 3 எண்கள் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. Bas Instruments and Technologies, Coimbator, ரூ.1.46,320/- Cube Weighing Solution, Coimbatore அவர்கள் ரூ.1,73,460/- மற்றும் Sys Weigh Tech, Coimbatore அவர்கள் ரூ. 1,88,800/- விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர். எனவே குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர். Bas Instruments and Technologies, Coimbatore அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5 /259 /2022)**

**18.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14-ல் பேண்ட் லைன் பகுதியில் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே மேற்கண்ட சாலையை சீரமைத்து தரும்படி நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. இப்பகுதியில் அதிக அளவில் குடியிருப்புகள், வணிக வளாக கட்டிடங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் அமைந்துள்ளது. இச்சாலையை பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே மேறக்ண்ட

சாலையை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.7.35 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகர அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

19 .இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். -8-ல் பட்பயர் Torm Gate முதல் பாரதியார் நகர் செல்லும் சாலையின் ஓரத்தில் அபாயகரமான 12 கற்பூர மரங்கள் உள்ளன அம்மரங்களை ஒட்டி மின் இணைப்பு கம்பிகள் செல்வதால் மழை, புயல் காற்று வீசும்போது, அடிக்கடி மின் துண்டிப்பு ஏற்பட்டு பாரதியார் நகர், பட்பயர், காவல் நிலை காவலர் குடியிருப்பு பகுதியிலுள்ள, குடியிருப்பு வாசிகளுக்கு மின் தடை ஏற்படுவதால், பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் இம்மரங்களை ஒட்டி 2" குடிநீர் குழாய் செல்வதால் மரக்கிளைகள் முறிந்துவிழும்போது குடிநீர் குழாய் பழுதடைகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் சாலையின் ஓரத்தில் உள்ள மரங்களை வெட்டி அகற்ற வேண்டும் என வார்டு எண். 8, நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

20. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். -36-ல் கீழ்காந்தி நகர் பகுதியில் உள்ள வீடுகள் சரிவான பகுதியாக இருப்பதால், வீடுகளுக்கு மேற்பகுதியில் உள்ள இடங்களில் இருந்து மழைக் காலங்களில் மழைநீர் ஆனது வீடுகளுக்குள் புகுந்து விடுகின்றது. இதனால் இப்பகுதியில் உள்ள மழைநீர் கால்வாய் பழுதடைந்து உள்ளதால், மழைநீரானது அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுந்துவிடுகின்றது. எனவே இப்பகுதியில் உள்ள மழைநீர்க் கால்வாய் தூர்வாரி கால்வாயின் சுவர் இடிந்து உள்ள இடத்தில் புதிய சுவர் அமைத்து தர வார்டு எண். 36, நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**21** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். -33-ல், தலையாட்டிமந்து பகுதிக்குட்பட்ட மேல்தலையாட்டு மந்தில் உள்ள, கிருஷ்ணர் கோவிலில் இருந்து ஸ்ரீவிநாயகர் கோவில் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்து உள்ளது. மேலும் கழிவுநீர் கால்வாயும் பழுதடைந்து சாலையில் செல்கிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே மேற்கண்ட பழுதடைந்த சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் ஆகியவற்றை சரிசெய்து தருமாறு வார்டு எண். 33, நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**22**. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். -36-ல். குள்ளப்பாளையம் பகுதியில் சுமார் 30க்கம் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதியில் உள்ள நடைபாதை ஆனது, மழையினால் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளதால், அப்பகுதி வழியாக பொதுமக்கள் மற்றும் வயதானவர்கள் கடந்து செல்ல மிகவும் கடினமாக உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்து நடைபாதையை புதிதாக அமைத்து தருமாறு. வார்டு எண். 36, நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**23.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். -27-ல் தீட்டுக்கல் பகுதியில் JSS பள்ளிக்கு பின்புறம் உள்ள குடியிருப்புக்கு தெருவிளக்கு இல்லாத காரணத்தினால், அப்பகுதியில் வனவிலங்குகள் அச்சுருத்தலும் மற்றும் இருள் சூழ்ந்த பகுதியாக உள்ளதால், அப்பகுதியில் உள்ள மக்கள் இரவு நேரங்களில் வெளியே செல்ல முடியாத நிலையில் உள்ளனர். ஆகையால் மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி, மேற்கண்ட இடத்தில் ஐந்து மின்கம்பங்கள் அமைப்பதற்கும் அதற்கான செலவினத்திற்கு நகரமன்றத்தின் ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**24.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். -9 பகுதியில் மஞ்சு வீட்டில் இருந்து ஜோசப் வீடுவரை உள்ள 100 மீ நடைபாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் வயதானவர்கள் நடந்து செல்ல முடியாமல் மிகவும் சிரமமமாக உள்ளது. இதனால் மேற்கண்ட இடத்தில் உள்ள பழுதடைந்த நடைபாதையை செப்பனிட்டு தருமாறு வார்டு எண். 9, நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**25.**இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். -3, அணிக்கொரை செல்லும் சாலையில் முனீஸ்வர் ஆலயம் அருகே, சாலை ஓரத்தில் உள்ள மண்திட்டு கடந்த ஆண்டு பெய்த மழையினால் சரிந்து விழும் நிலையில் உள்ளது. இதனால் சாலை பழுதடையும் நிலை உள்ளது. மற்றும் திருமதி.ராணி என்பவர்களின் வீட்டின் பின்புறம் தடுப்புச்சுவர் அமைத்து தர வார்டு எண். 3, நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**26.**இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். -4-ல், டாக்டர் அம்பேத்கர் காலனி பகுதியில் கடந்த வாரம் பெய்த மழையின் காரணமாக விஜயலட்சுமி, க..எண்.191 மற்றும் ராணி க.எண். 187 சம்பூர்ணம் என்பவரது வீட்டின் பின்புறம் மண்திட்டு சரிந்து வீடுகள் ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே அப்பகுதியில் 10 மீட்டர் நீளம் 5 மீட்டர் உயரம் உள்ள இடத்திற்கு தடுப்புசுவர் அமைத்து தருமாறு வார்டு எண். 4, நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**27.**இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 8, பட்டயர், மேட்டுச்சேரி பகுதியில் அரசு வாயிலாக சுமார் 300க்கம் மேற்பட்ட குடும்பங்கள் இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டு அதில் பொதுமக்கள் வீடுகல் கட்டி வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதியிலேயே இறந்தவர்களின் அடக்கம் செய்ய (மயானம்) இடம் ஒதுக்கப்பட்டு உள்ளது. இறந்தவர்களை அடக்கம் செய்து வருகின்றனர். இறந்தவர்களின் சடங்குகள் மயானத்தில் நடந்து வருவதால் இரவு போன்ற நேரங்களில் பன்றி மற்றும் புலி நாய் சிறுத்தை போன்ற வனவிலங்குகள், இப்பகுதியில் குடிபெயர்ந்து உள்ளது. இதனால் அப்பகுதியில் இரவு நேரங்களில் அவர்களின் உயிருக்கு உத்திரவாதம் இல்லாமல் இருப்பதால், மயானத்தினை சுற்றி கம்வி வேலி அமைத்து மற்றும் கான்கீரீட் சிமெண்ட் பாதையும், சடங்குகள் செய்ய குடிநீர் குழாய் பொருத்தியும், சின்டெக்ஸ் டேங்க் பொருத்தி கொடுத்தால், அப்பகுதி மக்கள் மிகவும் பயன்பெறுவார்கள் என வார்டு எண். 8, நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**28.**இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.28 மணி லாட்ஜ் பகுதியில் இருந்து குந்தா ஹவுஸ் பகுதிக்கு செல்லும் நடைபாதையானது. மிகவும் மோசமாக உள்ளதால், அதனை அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும் இவ்வழியினை பள்ளிக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் அனைவரும் பயன்படுத்தி வருகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள நடைபாதையை சீரமைத்து தருமாறு வார்டு எண். 28, நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**29.**இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.17 கிரீன் பீல்டு பகுதியில் சுமார் 150 வீடுகள் உள்ளன. ஆனால் மக்கள் பயன்படுத்த, அப்பகுதியில் ஒரு சமுதாயக் கூடம் இல்லை. அதனால் எங்கள் பகுதியில் கிரீன்பீல்டு, விநாயர் கோவில் பின்புறம் நமது நகராட்சி குடியிருப்பிற்கு பின்புறம் சுமார். 1.45 சென்ட் இடம் உள்ளது.. அதனை மக்களின் நலன் கருதி

அவ்விடத்தில் ஒரு சமுதாயக் கூடம் கட்டி தருமாறு, நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**30.**இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.9 , பெரியார் காலனி பகுதியில் மஞ்சு வீட்டிலிருந்து ஜோசப் வீடுவரை சுமார் 75 மீட்டர் தூரம் சிமெண்ட் நடைபாதை மிகவும் மோசமாக உள்ளது. இப்பாதையை சீரமைத்து, சேறு, சகதியுமாக உள்ள பகுதியை மதிப்பீடு செய்து நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்ற, மேற்கண்ட பகுதியில் உள்ள 75 மீட்டர் நீளம் , 2.50 மீட்டர் அகலம் உள்ள நடைபாதையை சீரமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு வார்டு எண். 9, நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

(ஒப்பம்)xxxx

**நகரமன்ற தலைவர் ,**

**உதகமண்டலம் நகராட்சி.**



ஆணையாளர்,

உதகமண்டலம் நகராட்சி